11

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1076/1 - 1999 අප්‍රේල් 19 වැනි සඳුද - 1999.04.19

1076/1 ஆம் இலக்கம் - 1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 21/78 iv

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1999, ஏப்பிறல் 09.

### கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நூலக மற்றும் தகவல் அறிவியல்கள் தேசிய நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது 1999, ஏப்பிறல் 20 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டமானது, (இதனகத்தின்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட 1998 ஒற்றோபர் 21 ஆந் தேதிய, கட்டளைமூலம் தாபிக்கப்பட்ட (இதனகத்தின் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நூலக மற்றும் தகவல் அறிவியல் கள் தேசிய நிறுவகத்துக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இந்நிறுவகமானது (இதனகத்தின் பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.

4. சட்டத்தினதும், ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கும் (இதனகத்தின் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் அமைவாக, நிறுவகம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :-

(அ) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான நூலக மற்றும் தகவல் அறிவியல்களின் அத்தகைய கிளைகளில் போதனை மற்றும் பயிற்சி வழங்குதலும் ஆராய்ச்சி செய்தலும் ;



குறிப்பு.– 1075/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி தொடரின் இறுதி இல. 1075/11.